**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்,**

**முன்னிலை: திரு.ஸ்வர்ணம் J.ராஜகோபாலன், B.A.B.L.,(Hons.)**
**கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.**

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**E.P.No.92/2024**
**in**
**Arb.No.85/2023**

மேற்பார்வையாளர்
மெசர்ஸ் ஸ்ரீகோகுலம் சிட் & பைனான்ஸ் கம்பெனி பிரைவேட் லிட்.,
எண்.49 ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை 600 024

.... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1) R.M. மாதேஸ்வரன்
2) M.பவானி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 09.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D.C.செந்தில் அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மணிகண்டன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்வதற்கு பல வாய்தாக்கள் வழங்கப்பட்ட பின்னரும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை 1ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகவில்லையாதலால் அவர் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டும், 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து எவ்வித கோருரிமையும் இல்லை. மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்துக்களை கட்டளை 21 விதி 54–ன்படி ஜப்தி செய்தும், பின்னர் கட்டளை 21 விதி 66–ன்படி நோட்டீஸ் அனுப்பியும் மனுச்சொத்தை ஏலம் போடுவதன் மூலம் வசூலாகும் தொகையிலிருந்து

மனுதாரர் / வாதிக்கு டிக்கிரித் தொகையை வசூல் செய்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் தீர்ப்பாணை பெற்றவர் ஆவார். 1ம் எதிர்மனுதாரர் தீர்ப்புக்கடனாளி ஆவார். இசைவுத் தீர்வு வழக்கு எண்.85/2023–ல் 21.12.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில், மனுதாரர் வங்கிக்கு வரவேண்டிய தொகையை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்றும், எனவே, 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுவில் கண்ட சொத்துக்களை ஜப்தி செய்து, விற்பனை செய்து தீர்ப்பு தொகையை மனுதாரர் பெற உத்தரவிட வேண்டுமென கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **இம்மனுவில் முடிவு செய்ய வேண்டிய சங்கதி யாதெனில்,**

இம்மனு அனுமதிக்கத் தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. இந்த நிறைவேற்றுதல் மனுவானது Arb.No.85/2023–ல் 21.12.2023–ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பேரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் கண்டதும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதுமான சொத்துக்களை ஜப்தி செய்து ஏல இஸ்தியார் அனுப்பி மேற்படி சொத்தினை ஏலம் விடுவதன் மூலம் இந்த மனுவில் கண்டுள்ள தொகை வகையறாவை மனுதாரர் / வாதிக்கு வசூலித்துக் கொடுக்க வேண்டும் என்று பரிகாரம் கோரி மனுதாரர் /வாதி இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6. மனுதாரருக்கு செலுத்த வேண்டிய மொத்த தொகையான ரூ.12,18,383.15–ஐ 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூல் செய்யும் பொருட்டு, 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மனு சொத்தை ஜப்தி செய்து, இந்நீதிமன்றத்தின் மூலம் ஏலம் விட்டு, அதன் மூலம்

கிடைக்கப்பெறும் தொகையை வசூலித்து தர வேண்டும் மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

7. 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி, எதிருரை தாக்கல் செய்வதற்கு பல வாய்தாக்கள் வழங்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை, 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் 1ம் எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டுள்ளார்.

8. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் / வாதியிடம் பெற்ற தொகை வகையறாவுக்காக மத்திய சென்னை சிட் ஃபண்ட் வழக்குகளுக்கான நடுவர் வழங்கிய 21.12.2023–ம் தேதியிட்ட உத்தரவின்படி மேற்படி தொகை வகையறாவை செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுநாள் வரையிலும் 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தவில்லை என்றும், எனவே, மனுவில் கண்டுள்ள சொத்தை விற்பனை செய்து தீர்ப்பு தொகையை மனுதாரர் பெற உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், 1ம் எதிர்மனுதாரர் மேற்படி சங்கதியினை மறுத்து தீர்ப்பாணை தொகையை செலுத்தியதற்கான எவ்வித சான்றும் முன் வைக்கப்படாத நிலையிலும், மேற்கண்ட தீர்ப்பினை எதிர்த்து எதிர்மனுதாரர் தரப்பில் மேல்முறையீடு தாக்கல் செய்து, அம்மேல்முறையீடு தாக்கல் செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தாத நிலையிலும், தீர்ப்பின் பலனை மனுதாரர் நுகரும் வகையில் மனுச்சொத்தை பற்றுகை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும் என தீர்மானித்து மனுச்சொத்தை பற்றுகை செய்ய உத்தரவிடப்படுகிறது.

உத்தரவு பகரப்பட்டது, முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடுகின்றது. மனுச்சொத்தை பற்றுகை செய்ய வாய்தா – 20.04.2026.

படி செலுத்த மூன்று நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லி, அவரால் கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை திருத்தி, இன்று **2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ஆம்** நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SWARNAM J RAJAGOPALAN
Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 11:41:09 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**இணைப்பு:**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**இல்லை**

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 11:41:16 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.